**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 317 நாள்: 22.07.2026

**அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (22.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், 200அடி சாலை பகுதியில் உள்ள டி.வி.எஸ் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, வார்டு-87க்குட்பட்ட கிழக்கு அவென்யூ சாலையில் உள்ள அம்மா உணவகம், அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, வார்டு-84க்குட்பட்ட வடக்கு அவென்யூவில் உள்ள கால்வாய், மழைநீர் உந்து நிலையம், வார்டு-82க்குட்பட்ட கருக்கு பிரதான சாலையில் உள்ள கொரட்டூர் உபரிநீர் கால்வாய், அப்பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் நடைபெற்று வரும் பணி, கருப்பன் குளம், வார்டு-83க்குட்பட்ட கருக்கு மேம்பாலம் கீழ் பகுதியில் வரையப்பட்டுள்ள சுவர் ஓவியங்கள், கலெக்டர் நகரில் அமைக்கப்பட்டு வரும் மாடுகள் காப்பகம் கட்டுமானப் பணி, அப்பகுதியில் உள்ள விளையாட்டு மைதானம் உள்ளிட்ட வற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வார்டு-80க்குட்பட்ட திருமலைப்பிரியா நகரில் உள்ள வண்டல் வடிகட்டி தொட்டியில் உள்ள வண்டல் மண் அகற்றும் பணி, வார்டு-86க்குட்பட்ட அத்திப்பட்டு குப்பைக் கொட்டும் வளாகம் உள்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம், அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் சென்னை மேல்நிலைப் பள்ளியின் கட்டுமானப் பணி, சிட்கோ நகர் 3வது பிரதான சாலையில் நீர்வளத் துறை சார்பில் நடைபெற்று வரும் பணி, வார்டு-88க்குட்பட்ட பாடி, எம்.டி.எச். சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, பாடி மேம்பாலம் கீழ் பகுதியில் அழகுப்படுத்தும் பணி, தூய்மைப் பணியாளர்களுக்கான ஓய்வறை 93 வார்டு அலுவலகம் வளாகத்தில் கட்டுமானப் பணி, வார்டு-93க்குட்பட்ட பிள்ளையார் கோவில் தெருவில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடக் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும், மேம்பாட்டுப் பணிகளையும், கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**